மதிய உணவாக
கோழி பிரியாணி
ருசிமிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள

செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ மிக்ஸ் ஜூஸ்க்கும்

செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



சுடர் 10 | திருவள்ளுவர் ஆண்டு 2026 | தை 07 சனிக்கிழமை (21 – 01 – 1995) | UTHAYAN A Lively National Tamil Daily | கதிர் 55


# இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு கிடைப்பதற்கு பாப்பரசர் பிரார்த்தனை

## இதுவரை தீர்க்கப்படாதது குறித்து சந்திரிகாவிடம் கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 21

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு நீதியான சமாதானத் தீர்வு அவசியம். அது கிடைக்க வேண்டும். — என்று பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பிரார்த்தித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியின் போது உரையாற்றிய வேளையிலேயே பரிசுத்த பாப்பரசர் இவ்வாறு பிரார்த்தித்தார்.

இதேவேளை, இனப்பிரச்சினை இதுவரை காலமும் தீர்க்கப் படாதது குறித்து திருத்தந்தை தம்மிடம் கவலை தெரிவித்ததாக ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து அளிக்கப்பட்ட வரவேற்பில் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்ததாவது;-

இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான சமாதானத் தீர்வு அவசியம். இலங்கையை இறைவன் ஆசீர்வதித்து சமாதானத்தை வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

### பௌத்தர் மீது மதிப்பு. மரியாதை

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் இலங்கை மக்களுக்கு நல்லெண்ணமும்; பலமும், விடாமுயற்சியும் கிடைக்கவேண்டும்.

''பௌத்த மக்கள் பால் எமக்கு மதிப்பும், மரியாதையும் இருக்கிறது.

அன்பு, கருணை, புரிந்துணர்வு, சமத்துவம் என்ற நான்கு மகத்தான உண்மைகளை பௌத்தம் போதிக்கிறது.

ஒவ்வொருவருக்கும் நேசக்கரம் நீட்டுகிறேன்.

இலங்கையர் வரலாற்றில் சமயம் முக்கிய பங்கு வகிக்கிறது. பல வழிபாட்டு தலங்களில் இதைக் காணமுடிகிறது.



இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் சமய அனுஷ்டானங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றனர்.

சமய நம்பிக்கைகள் மற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழிலும், சிங்களத்திலும் வணக்கம் கூறிய பாப்பரசர்

கொழும்பு, ஜன. 21

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் உரையாற்றிய திருத்தந்தை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது உரையின் முடிவில் தமிழிலும், சிங்களத்திலும் வணக்கம் கூறினார்.

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அங்கு ஆங்கிலத்தில் உரையாற்றினார். முடிவில் ''ஆய்போவன்'' என்று சிங்களத்திலும், ''வணக்கம்'' என்று தமிழிலும் கூறி அவர் விடைபெற்றார். [ஐ-6]

## பாப்பரசர் முத்தமிட பாத்திரத்தில் மண்!

### முழந்தாளிட முடியவில்லை

கொழும்பு, ஜன. 21

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் முதலில் சம்பிரதாயப்படி இலங்கை மண்ணை முத்தமிட்டார்.

வழமைபோல் முழந்தாளிட்டு — குனிந்து — தரையை முத்தமிட முடியாத நிலையில் பாப்பரசர் இருந்ததால் பாத்திரம் ஒன்றில் வழங்கப்பட்ட மண்ணையே அவர் முத்தமிட்டார்.

விமானத்தில் வந்திறங்கிய பாப்பரசர் வழமைக்கு மாறாக மிகவும் களைத்தவராகக் காணப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-3)

## ஜப்பானில் மீட்பு வேலை தொடர்கிறது

டோக்கியோ, ஜன. 21

பூகம்பத்தினால் பாதிக்கப் பட்ட மத்திய ஜப்பானின் கோபை நகரில் பூகம்பம் நிகழ்ந்து 72 மணித்தியாலங்கள் கழிந்த பின்பும் பலர் இடிபாடுகளிடையில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர்.

இந்த பூகம்பத்தினால் இறந்தவர்கள் எண்ணிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு

கொழும்பு, ஜன. 21

நேற்று பிற்பகல் 3 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய பரிசுத்த பாப்பரசருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப் பட்டது.

சிட்னியில் இருந்து விமான மூலம் வந்து சேர்ந்த பாப்பரசரை கொழும்பில் உள்ள வத்திக்கான பிரதிநிதி, கொழும்பு அதிமேற்றிராணியார் கலாநிதி நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ, கொழும்புதுணைமேற்றிராணியார் மல்கம் ரஞ்சித், அதிவண ஒஸ்வால்ட் பேர்த் ஆகியோர் உட்பட பலர் வரவேற்றனர்.

அங்குள்ள பிரமுகரின் புத்தகத்தில் பாப்பரசர் கையொப்பம் இட்டார்.

அங்கிருந்து பாப்பரசர் குண்டு துளைக்காத திறந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்தமத தலைவர்கள் எவரும் பங்குபற்றவில்லை

கொழும்பு, ஜன. 21

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் அளித்த வரவேற்பு வைபவத்தில் பௌத்த மத தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பாப்பரசரின் விஜயத்தை பகிஷ்கரிப்பது என பௌத்த அமைப்புக்கள் முன்னரே முடிவு செய்திருந்தன.

எனினும் இறுதி நேரத்தில் சில பௌத்த மத தலைவர்கள் மனம் மாறி அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்களா என்பது தெளிவாக தெரியவரவில்லை என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

நேற்று கொழும்பில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபரின் கீழேயே மாவட்ட நிர்வாகம்!

### யாழ். செயலகத்துக்கு சுற்று நிருபம்

யாழ்ப்பாணம், ஜன. 21

மாவட்ட நிர்வாகங்களை மீண்டும் அரச அதிபர்களின் கீழ் கொண்டுவருவது தொடர்பான சுற்று நிருபம் யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தை அரச அதிபர்களின் கீழ் உடனடியாகக் கொண்டுவருமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. ஆர். எஸ். ஜெயரத்தினா பணித்துள்ளார்.

அரச அதிபதிரின் முழுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கான கண்காணிப்புக் குழு இயங்குவதில் தாமதம் ஏற்படும்

### 2 விடயங்கள் குறித்து அரசிடமிருந்து பதில் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 21

வடக்குக்கான போர் இடை நிறுத்த கண்காணிப்பு குழுக்கள் இயங்குவது தாமதமாகும் என தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் போராளிகள் சுதந்திரமாக செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் —

கடல்வலயத் தடைச் சட்டத்தை முற்றாக வாபஸ்பெற வேண்டும் என்றும் — விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் வந்த அரச குழுவினரிடம் கேட்டிருந்தனர்.

இந்த இரு விடயங்கள் குறித்தும் எழுத்து மூலம் பதில் அளிப்பதாக தெரிவித்து அரச குழுவினர் கொழும்பு திரும்பிய போதும், நேற்று மாலை வரை இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்று விடுதலைப் புலிகளின்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பதில் கிடைத்த பின்பே கண்காணிப்புகுழுவை சந்திக்கவோ, அது இயங்கவோ தாம் ஏற்பாடு செய்வோம் என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை —

கிழக்கு மாகாணத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்தமிழ் அறிஞரைஅவமதித்தமை:

## இலங்கை அரசால் எதுவும் செய்ய முடியாது

### அமைச்சர் ஜெயக்கொடி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 21

தஞ்சாவூரில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்த சமயம் பேராசிரியர் சிவத்தம்பி உட்பட ஈழத்தமிழ் அறிஞர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட விவகாரம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் இலங்கை அரசு உள்ளது.

கலாசார, சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் ஜெயலலிதாவே தவறுக்கு முழுப் பொறுப்பு!

சென்னை, ஜன. 21

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்த ஈழத்தமிழ் அறிஞர்கள் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரத்தில் தமிழ்நாடு அரசே தவறிழைத்தது. அதற்கான முழுப் பொறுப்பையும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவே ஏற்கவேண்டும்.

தமிழக சட்டசபை உறுப்பினர் பன்ருட்டி இராமச்சந்திரன் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் வேலுப்பிள்ளை உட்பட தமிழறிஞர்கள் பலர் வெளியேற்றப்பட்டதற்கு புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. தான் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் புலனாய்வுப் பிரிவினர் வழங்கும் தகவல்கள் எல்லாம் சரியானவை அல்ல. தவறான தகவல்களையும் அவர்கள் தரலாம். அரசியல் தலைவர்கள் அதை அப்படியே நம்பக்கூடாது.

— இவ்வாறு பன்ருட்டி இராமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## ஹபரண கப்பல் மாவுடன் வந்து சேர்ந்தது

வடமராட்சி, ஜன. 21

திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவுடன் 'ஹபரண' கப்பல் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தது.

யாழ். மாவட்டத்தில் நிலவும் மா தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் ஹபரண கப்பல் மூலம் மா எடுத்துவரப்பட்டுள்ளது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பல் காலநிலை சீரில்லாததால் காங்கேசன்துறைக்கு சென்றது என்றும் —

காலநிலை சீராகும் பட்சத்தில் இன்று அக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனவும்—தெரிவிக்கப்பட்டது. (இ-173)

## அரசு–புலிகள் போர் இடை நிறுத்தம் மீறல்கள் எதுவுமின்றி தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 21

விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்கும் இடையிலான போர் இடை நிறுத்தம் எதுவித மீறல்களும் இன்றி தொடர்கின்றது.

எனினும் வடபகுதியில் போர் இடை நிறுத்தத்தை கண்காணிக்கும் குழுக்களுக்கான தலைவர்களாக செயற்படவுள்ள கனேடிய, நெதர்லாந்து பிரதிநிதிகள் இது வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

கிழக்கு பகுதியில் கண்காணிப்பு குழுவினர் தமது பணியில் ஈடுபட்டு வருகின்றனர். [இ-3]

## அரசியல் தஞ்சம் கோருவோரை விசாரணைக்கு உட்படுத்தமுடியாது

### லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜன. 21

சட்டவிரோதமாக பிரிட்டனுக்குள் பிரவேசித்த பின்னர் அரசியல் தஞ்சம் கோருபவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதும், தடுத்து வைப்பதும், சட்டத்துக்கு முரணானது இவ்வாறு லண்டன் உயர்நீதிமன்றம் மி. முக்கிய தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது.

சென்ற வருடம் சட்டவிரோதமாக பிரிட்டனுக்குள் பிரவேசித்த பின்னர் அரசியல் தஞ்சம் கோரிய மூன்று இந்தியர்கள் 12 தினங்கள் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதுதொடர்பான வழக்கிலேயே லண்டன் உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என சந்தேகிக்கப்பட்ட இந்த மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் தடுத்து வைத்திருந்ததுக்கு குடிவரவு சேவை அதிகாரிகள் பயன்படுத்திய நிர்வாக அதிகாரங்களுக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இந்த மூவரினதும் அரசியல் தஞ்சம் கோரும் மனுக்கள் சம்பந்தமான முடிவு அறிவிக்கப்படும் வரை இந்த மூவரையும் தடுத்து வைப்பதற்கு, விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அல்லது நாடுகடத்துவதற்கு குடிவரவு அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத்தீர்ப்பினால் பிரிட்டனில் தடுப்பு காவல் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களை விடுதலை செய்யவேண்டிய நிலை ஏற்படும் என பிரிட்டிஷ் அரசு கருதுகிறது. (இ-3)

## கொழும்பில் தேடுதல், சோதனை கடந்த சில தினங்களாக அதிகரிப்பு

### கொச்சிக்கடைப் பகுதியில் 15 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 21

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் கடந்த ஓரிரு தினங்களாக தேடுதல், சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

4 இராணுவ [illegible] பொலிஸார் என்ற வீதத்தில் கூட்டாக வீடுகள், விடுதிகள் என்பன சோதனையிடப்படுகின்றன.

பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு [illegible] உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை, ஜம்பட்டா தெரு பகுதிகளில் 15க்கு மேற்பட்டோர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வீதிகளில் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டை இட்டுக்கொண்டிருக்கும் 50 ஹைலைன் கோழிகள், 4 சோடி பான்ரெயில் புறாக்கள் விற்பனைக்குண்டு. ந வரதராசா, ராஜ்கோபால்ஸ் களஞ்சியம் (மட்டுவில் உபதபாற்கந்தோர் அருகில்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. [34785]

## விற்பனையாளர் தேவை

பிரபல விற்பனை நிலையத்திற்கு 20 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட ஆங்கில அறிவுடைய ஆண் விற்பனையாளர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கல்வித்தகைமைகளுடனும் முன் அனுபவ விவரங்களுடனும் 30-1-95 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல: 750, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34735)




[சி 261]

## பணிப்பெண் தேவை

வயது வந்த கணவன் மனைவியுள்ள வீட்டிற்கு வீட்டோடு இருந்து வேலைகளை செய்வதற்கு 35—50 வயதிலுள்ள பெண் உதவியாள் தேவை. சம்பளம் நேரில் பேசப்படும். இல. 25, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (34739)

உடல் நலம் குன்றிய வயோதிப மாதுவை கவனிக்கக் கூடிய பெண் உதவியாளர் தேவை வயது30—50 நேரில் வரவும். ஊதியம் பேசிக் கொள்ளலாம். இல. 90/4, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [34788]

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 22-1-95 ஞாயிறு வெளிவிடப்படும். தேவையானோர் தொடர்புகொள்ளவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [34787]

## புலமைப் பரிசில் - 95

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

---

கணபதிதுணை

கரவெட்டி தச்சன் தோப்பு

## ஸ்ரீசிந்தாமணி விநாயகர் தேவஸ்தானம்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

தை மாதம் 8ஆம் தீகதி
(22 - 01 - 95) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3-00மணி முதல் பூர்வாங்க கிரியைகள் யாவும் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெற்று

தை மாதம் 9ஆம் திகதி
(23 - 01 - 95) திங்கட்கிழமை
காலை 6மணி 35 நிமிடம் தொடக்கம் 7மணி 58 நிமிடம் வரை உள்ள சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பாலஸ்தாபன பிரதம குரு:
சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாச்சாரியார்.
(வூரெழு)

அடியவர்கள் வந்து தரிசித்து ஆனைமுகன் அருள் பெறுக. சுபம்!

—பரிபாலனசபை.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (34762)

---

விடுதலைப் புலிகளின் போராளியும்
சங்கீத ரத்தினம் மா. சிதம்பரநாதனின்
[விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்]
மாணவனுமாகிய



செல்வன் வசந்தன்
அவர்களின்
(சந்திரராஜா துளசிதரன்)

## மிருதங்க அரங்கேற்றம்

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம்: இன்று (21–01–1995) சனிக்கிழமை மாலை 4-00 மணி

தலைமை:
திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

முதன்மை விருந்தினர்:
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்
(பொறுப்பாளர், அரசியல் துறை, தமிழீழம்)

சிறப்பு விருந்தினர்கள்:
கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்
(தலைவர் யாழ்/ பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம்)

திரு. சி. மகேந்திரன் அவர்கள்
(அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

[சி/402]

---

## பிற்போடப்பட்டுள்ளது

யா/ இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் 1995—01—22ஆம் திகதி நடத்த இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 1995—03—12 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகக் குழுவினர்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ இணுவில் மத்தியகல்லூரி,
இணுவில். (34786)

---

உ

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!
நிகழும் மங்கள கரமான பவ வருடம் தைத் திங்கள் 8ஆம் நாள் (22-01-95) ஞாயிற்றுக்கிழமை காலை 9-47 தொடக்கம் 11-23 வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி வைரமுத்து
தம்பதிகளின் புத்திரன்
திருவளர் செல்வன்
**யோகேஸ்வரன்**
(முருகன் உழவர் களஞ்சியம், சுன்னாகம்)
அவர்கட்கும்

திரு. திருமதி தில்லைநடேசபிள்ளை
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**அருட்சோதி**
அவர்கட்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு சாவகச்சேரி சிவன் கோயிலில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் திங்கள் (23 - 01 - 95) மாலை 4மணிக்கு கொண்டாட்டம் நடைபெறும்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி வைரமுத்து (பன்னாலை)
திரு. திருமதி வை. கனகசபாபதி
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.

திரு. திருமதி ந. அருந்தவராசா
திரு. திருமதி கோ. விஜயகுமார்.
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(34792)

---

அருள்மிகு சித்தி விநாயகர் கோயில்
அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில்
அச்செழு

## குரு தீக்ஷா அபிஷேக விஞ்ஞாபனம்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பவ வருடம் தை மாதம் 8ஆம் திகதி (22-01-1995) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மேல் 10-00 மணிக்குள்
★ வரும் சுபமுகூர்த்தத்தில் ★

பிரம்மஸ்ரீ சி. கிருஷ்ணசுவாமி சர்மாவுக்கு
✶ குரு தீக்ஷா அபிஷேகம் ✶

நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்
நீர்வேலி சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள்
ஆகிய குருமார்களினால் மேற்படி ஆலயத்தில் நடத்தி வைக்கப்படவுள்ளது.

✶ ஆசியுரை வழங்குவோர்:
சிவஸ்ரீ தி. கெங்காதரக்குருக்கள் (ஈவினை)
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் (புன்னாலைக் கட்டுவன்)

★ அன்புடன் அழைக்கும் ★

சோ. பாலகிருஷ்ணசர்மா தம்பதிகள்,
புன்னாலைக்கட்டுவன்.

கு. சிதம்பரேஸ்வரசர்மா தம்பதிகள்,
அச்செழு.

[34795]

---

# கம்பன் குடும்பத்தவர்க்கு.....

பேரன்புடையீர்!

— வணக்கம்
— இவ்வாண்டுடன் எமது கம்பன் கழகம் இலக்கியப் பணியில் பதினைந்து ஆண்டுகளை நிறைவு செய்கிறது.
— இப் பதினைந்து ஆண்டுகளும், கழகத்தை, பல சோதனைகளையும் தாண்டி, நல்வழியில் வெற்றிகரமாக நாம் நடத்த தாங்கள் செய்த பேருதவியையும் காட்டிய ஆதரவையும் இவ்வேளை நன்றியோடு நினைக்கிறோம்.
— எம்மை வளர்த்த உங்கள் பாதங்களை மானசீகமாக வணங்குகிறோம்.
— எங்களாசிரியர்கள் எம்மிடம் ஒப்படைத்த இப்பணியை எம்மால் முடிந்த வரை முன்னெடுத்திருக்கிறோம்.
— அந்தத் திருப்தியில், நாம் ஒன்று கூடி எடுத்ததோர் முடிவை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.
— எம்மாலான வரை, இளந்தலை முறையினரை ஊக்கப்படுத்தி மரபு பேணும் நம் அணியில் நமக்குச் சமமாக நிறுத்தி இருக்கிறோம்.
— நம் தோளளவு வளர்ந்த தோழர்களாய் இன்று அவர்கள் நம்மருகில்.
— புதியன புகும் காலம் வந்துவிட்டது.
— இனியும் கழகப் பொறுப்புக்களை நாமே சுமப்பது என்பது நியாயமாகப் படவில்லை.
— எனவே, கம்பன் கழகத்தையும் அதன் முழு உரிமையையும் சொத்துக்களையும் அதன் அனைத்துச் செயற்பாடுகளையும் இவ்வாண்டு விழாவோடு இளந்தலைமுறையினரிடம் ஒப்படைப்பதென முழு மனதோடு முடிவு செய்துள்ளோம்.
— எம் மீது தாங்கள் காட்டிய அன்பும் நம்பிக்கையும் மரியாதையும் அவர்களுக்கும் தொடர உங்கள் சந்நிதியில் விண்ணப்பிக்கிறோம்.
— அவர்கள் இப்பணியை வெற்றியோடு முன்னெடுக்க உங்கள் ஆதரவை நல்குங்கள்.
— அவர்கள் ஆளுமைக்குத் தடையில்லாமல் முழுமையாகத் துணை நில்லுங்கள்.
— கம்பன் பணி காலம் கடந்து நிலைக்கப் பிரார்த்தியுங்கள்.
— இது பற்றி தங்கள் ஆலோசனைகளைப் பெறவும் காத்திருக்கிறோம்.
— வேறென்ன?
— மீண்டும் வணங்கி விடை கொள்கிறோம்.

"கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்"

தி. திருநந்தகுமார் (தலைவர்),
க. குமாரதாசன் (செயலர்),
கு. ஸ்ரீஇரத்தினகுமார் (பொருளாளர்),
இ. ஜெயராஜ் (அமைப்பாளர்)

[சி-200]

---

## முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு: 12 — 06 — 1915
உதிர்வு: 31 — 01 — 1994

### அமரர் முருகேசு செல்லத்துரை

திதி: பஞ்சமி 21 – 01 – 1995

வான் நிலவு நீ மறைந்தாய்
வையம் இருள் சூழ்ந்ததுவே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உத்தமரே எங்கள் ஐயாவே!
உமது ஏழாவது பிள்ளை காந்தியை
தேடிச் சென்றனையோ ஐயாவே!
என்றும் ஒளியாய் இருந்து வழிகாட்டிய
எங்கள் அன்புத் தந்தையே!

## ஐந்தாம் ஆண்டு நினைவு



மலர்வு: 28 — 05 — 1959
உதிர்வு: 11 — 03 — 1990

### திருமதி காந்திமதி செல்லத்துரை

திதி: பூரணை 16 – 02 – 1995

அன்பான கணவரையும் பாசமகள் அனுஜாவையும்
வாழ்வெனும் கோயிலிலே வளமாக வாழ வைத்து
வயிற்றினிலே மகனோடு எமை மறந்து
விதியோடு சென்ற எம்மினிய காந்தியே!
உம் நினைவுகள் எம் நெஞ்சினிலே மறையுமுன்பே
எமக்கெல்லாம் வழிகாட்டிய தந்தை தனை
உம் இடமே அணைத்திட்ட
எம் அருமை காந்திமதியே!

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றென்றும் எமை விட்டழியாது.
உங்கள் ஆத்ம ஈடேற்றத்திற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துன, மைத்துனிகள்.

கணவர், மகன், அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பெறாமகள்மார், மருமக்கள்.

''திருமால் இல்லம்''
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

[34794]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அமைச்சர்களின் பங்கு வேண்டும்

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்தால் நாடு அளப்பரிய பலாபலன்களை அடையலாம். அவற்றில் காங்கேசன் சிமெந்து தாராளமாகக் கிடைப்பதும் ஒன்றாக இருக்கும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா.

காங்கேசன்துறையில் உள்ள இரண்டு சிமெந்து ஆலைகளும் நாட்டின் சிமெந்துத் தேவையை மிகக் கணிசமான அளவில் பூர்த்தி செய்து வந்தன. 1990 இல் போர் தொடங்கிய பின்னர் அவை செயலிழந்து விட்டன. அதனால் இலங்கை முழுவதிலுமே சிமெந்துத் தட்டுப்பாடு உண்டாகிவிட்டது.

போரை நிறுத்தி, காங்கேசன்துறை சிமெந்து ஆலைகள் இரண்டையும் இயக்க முடிந்தால், நாட்டின் சிமெந்து தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமன்றி ஏற்றுமதியும் செய்யலாம் என்பது அமைச்சர் சிறிபால டி சில்வாவின் மதிப்பீடு.

அவர் தமது அமைச்சோடு சம்பந்தப்பட்ட சிமெந்து உற்பத்தி குறித்து மட்டும் பார்க்காமல், போர் நிறுத்தப்பட்டால் பரந்தளவில் உண்டாகக்கூடிய நன்மைகளையும் நோக்குகிறார்.

இவரைப் போலவே, புதிய அரசாங்கத்தில் பதவி வகிக்கும் சகல அமைச்சர்களும், போரை நிறுத்துவதனால் உண்டாகக்கூடிய பலன்களை அறிந்திருப்பர். அவர்களில் பலரும் அது குறித்துப் பகிரங்கமாகக் கூறியும் வருகிறார்கள்.

ஆனால் போரை நிரந்தரமாக நிறுத்துவதிலும், போரை நிறுத்துவதற்கு முக்கிய, முன்தேவையான இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதிலும் அமைச்சர்களின் செயற்பாடு ஆக்கபூர்வமானதாகத் தென்படவில்லை.

போரை நிரந்தரமாக நிறுத்துவதானால் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதற்கு, சீரழிந்து போயுள்ள தமிழர்களின் அன்றாட வாழ்க்கை இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இந்த யதார்த்தத்தை உணர்ந்து, அதற்கேற்ற அணுகுமுறையுடன் அமைச்சர்கள் செயற்பட்டால், நாடு அளப்பரிய பலாபலன்களைப் பெறலாம்.

அமைச்சர்கள் எல்லோரும் இதனைப் புரிந்து கொள்வது மட்டுமன்றி, அந்த இலக்கை அடைவதற்குச் செயற்படக்கூடியதாக தமது சக்தியையும் பயன்படுத்துவது அவசியம். ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகளுக்கு, ஆதரவு தெரிவிப்பதோடு மட்டும் அமைச்சர்கள் நிற்காது போரை நிறுத்துவதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தடங்கலாக இருக்கின்ற சக்திகளை வெல்லும் வகையில் செயலாற்ற வேண்டும்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்று தடவைகள் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் போர் இடைநிறுத்தம் — மோதல் தவிர்ப்பு ஒன்று மட்டுமே உருப்படியாக எய்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது, பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குவது, மீன்பிடித் தொழிலை தடங்கல் தடையின்றி முழுமையாகச் செய்வதற்கான வசதியைச் செய்வது போன்ற விடயங்களைத் தானும் அரசினால் சரிவர நிறைவேற்ற முடியவில்லை.

இந்தத் தடங்கல், தயக்க நிலையை நீக்குவதில் அமைச்சர்கள் பெரிதும் உதவலாம் தங்கள் அமைச்சு அலுவல்களில் அக்கறை காட்டுவது போல, இது விடயத்திலும் தமது புலனையும் சக்தியையும் செலுத்தினால் இப்போதுள்ள நத்தை வேகத்தை முயல் வேகமாக மாற்ற உதவலாம்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் அமைச்சர்கள் எல்லோரும் ஒரே எண்ணத்துடன், கைகோர்த்து, தமது சக்தியைச் செலுத்தினால் இலக்கை அடைவது கடினமல்ல.

# புதிய அரசமைப்புக்கான நகல்
# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம்!

கொழும்பு, ஜன. 21

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட தற்போதைய அரசமைப்பை நீக்கி, பிரதமர் தலைமையிலான ''வெஸ்மினிஸ்டர்'' ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கு வழி செய்யும் —

புதிய அரசமைப்புக்கான நகலை அரச தரப்பினர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்ததாக அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் தற்போதைய அரசமைப்பை நீக்கி பிரதமர் தலைமையிலான ஆட்சி முறைக்கு வழிசெய்யும் புதிய அரசமைப்பை ஏற்படுத்தப் போவதாக ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசும்— மீண்டும் மீண்டும் அறிவித்து வருவதும் —

புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு உரிய சிபார்சுகளைச் செய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அரசு நியமித்திருப்பதும் தெரிந்தவையே.

இந்தத் தெரிவுக்குழுவிடமே அரசு புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தை தற்போது சமர்ப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# தமிழக காங்கிரஸில் பூசல் வலுக்கின்றது!

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து வாழப்பாடி ராமமூர்த்தியை நீக்கி, அந்தப்பதவிக்கு குமரி அனந்தனை கட்சித் தலைவரும் பிரதமருமான நரசிம்மராவ் நியமித்திருப்பது கட்சியின் தமிழ்நாடு பிரிவுக்குள் பெரும் பிரிவை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காங்கிரஸின் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களில் 24 பேரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும், மாவட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் 27 பேரில் 20 பேரும் வாழப்பாடி ராமமூர்த்தியை ஆதரிப்பதாக வாழப்பாடியின் தீவிர ஆதரவாளரும் சட்டப்பேரவை உறுப்பினருமான தண்டாயுதபாணி அறிவித்திருக்கின்றார்.

எந்த சூழ்நிலை வந்தாலும் இவர்கள் அனைவரும் வாழப்பாடிக்கு ஆதரவாக இருப்பார்கள்; பின்வாங்கமாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

மாநிலத் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட வாழப்பாடி, கட்சித் தலைவர் நரசிம்மராவை மிகையாக விமர்சித்து வருகின்றார்.

''ராஜீவ் காந்தி நியமித்த மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்களை கடந்த மூன்று வருடங்களாக மெல்ல,மெல்ல ராவ் வெளியேற்றி வருகின்றார். என்னை வெளியேற்றியதுடன் அந்த நடவடிக்கை பூர்த்தியடைந்திருக்கின்றது'' — என்று கூறினார் வாழப்பாடி.

வாழப்பாடி ராமமூர்த்தியின் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகவும், கட்சிக் கொடியை அவமதித்த செயலுக்காகவும் அவரை கட்சி மாநிலத் தலைவர் பதவியிலிருந்து மட்டுமல்லாமல், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே விலக்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு மத்திய நலத்துறை இணை அமைச்சர் கே. தங்கபாலு தெரிவித்திருக்கின்றார். (உ)

# ராவ்- ஜெயலலிதா முக்கிய சந்திப்பு

சென்னை, ஜன. 21

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் மாலை புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

சுமார் 40 நிமிட நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது தமிழகத்துக்கு கூடியளவுநிதிஉதவியைப் பெற்றுக் கொள்வது குறித்து தமிழக முதல்வர் பிரதமருடன் உரையாடினார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் —

தமிழக முதல்வருக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை வெளியிட்டு வந்த தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடியை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு, ஜெயலலிதா சார்பு போக்குள்ள குமரி அனந்தனை அப்பதவிக்கு பிரதமர் ராவ் நியமித்துள்ளதை அடுத்து இச்சந்திப்பு நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் என சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

முறிந்து போயிருக்கும் அ. தி. மு. க. — இந்தியா காங்கிரஸ் கூட்டணி ராவ் — ஜெயலலிதா சந்திப்பை அடுத்து மீண்டும் துளிர் விடக் கூடும் என ஊகம் தெரிவிக்கப்பட்டது.

தமக்கு எதிரான நடவடிக்கைகளை ஆளுநர் மேற்கொண்டு வருவது குறித்து பிரதமரிடம் தமிழக முதல்வர் தமது ஆட்சேபத்தை வெளியிட்டிருப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. (உ)

### யாழ். மாவட்ட வயல் நிலங்கள்:
# ஆயிரம் ஏக்கருக்கு மேலும் காப்புறுதி செய்யலாம்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ். மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களையும் காப்புறுதி செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புச் குழுக் கூட்டத்தில் இது பற்றி யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அறிவித்தார்.

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் ஆயிரம் ஏக்கர் வரை மட்டுமே இதுவரை நெற்பயிருக்கான காப்புறுதி ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைமையகமும் இதுபற்றி யாழ் மாவட்டக் காரியாலயத்திற்கு அறிவுறுத்தி இருந்தது.

எனினும் இவ்விடயத்தில் யாழ். அரச அதிபர் தலையிட்டு கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவிருப்பதாக தெரிவித்துள்ளார். (ஒ-4)

### பெரும்போக செய்கை:
# பயிர் அழிவுகளை மதிப்பிடும் வேலை விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 21

பெரும்போக நெற்செய்கையின்போது கமத்தொழில் காப்புறுதிச் சபையில் காப்புறுதி செய்து கமநலசேவை நிலையங்களில் அழிவுகளை பதிந்த யாழ். மாவட்ட விவசாயிகளது பயிர் அழிவுகளை மதிப்பிடும் வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

கமநலசேவை நிலையங்கள் ரீதியாக பயிர் அழிவு மதிப்பீட்டுக்குழு அழிவுகளை மதிப்பிடும்.

இதற்கு ஏதுவாக உரிய கமநலசேவை நிலையங்களில் அழிவுகளை விவசாயிகள் பதிந்து கொள்ளுமாறு கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு. க. சுந்தரேஸ்வரன் கேட்டுள்ளார்.

கமநல சேவை நிலையங்கள் ரீதியாக அடுத்தமாதம் 2ஆம் திகதி உரும்பிராயிலும், 3 ஆம் திகதி புத்தூரிலும், 6 ஆம் திகதி கைதடியிலும், 7 ஆம் திகதி சாவகச்சேரியிலும், 9 ஆம் திகதி உடுவிலிலும், 10ஆம் திகதி புலோலியிலும், 13 ஆம் திகதி நல்லூரிலும், 16 ஆம் திகதி தொல்புரத்திலும், 17 ஆம் திகதி அம்பனிலும் நெற்பயிர் அழிவு மதிப்பீட்டு வேலைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### புலிகளின் குரல் வானொலியில்

**21— 01 — 1995**

**சனி இரவு**

- ★ 8-01 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர்கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கலந்துரையாடுவோம் — ''தவறான மருந்துப் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள்''
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**22 — 01 — 1995**

**ஞாயிறு காலை**

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15—களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**சனி மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15— வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாப் போட்டி
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பாமாலை
- ★ 6-15 —என் தெரிவு

## விவேகானந்தர் பிறந்த தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன 21.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை ஒட்டிய சிறப்புப் பணிகள் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மாலையில் விசேட நிகழ்ச்சிகள் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி தலைமையில் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் அன்பளிப்பு நிகழ்வுகளும் சுவாமி விவேகானந்தர் பற்றிய உரையும் இடம் பெறும். (ஒ-4)

## விவேகானந்தர் பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். கல்வி வலயம் ஒன்றுக்கு மட்டுப்பட்டிருந்த ''சுவாமி விவேகானந்தர் பேச்சுப்போட்டி'' யாழ். கல்வி வலயம் இரண்டுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக இராமகிருஷ்ணாலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் பெப்ரவரி 26ஆம் திகதி நடைபெறவிருந்த இறுதிப் போட்டிகள் மாவட்டப் போட்டிகளாக நடைபெறும்.

கோட்ட மாவட்டப் போட்டிகள் பெப்ரவரி 5ஆம் திகதி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-4]

## சண்டேசுர நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், ஜன.21

அகில இலங்கைத்திருமுறை மன்றத்தினர் நடத்தும் ஸ்ரீ சண்டேசுர நாயனார் குருபூசை விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏழாலை நால்வர் மடாலயத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் [பண்டிதர் திரு வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஸ்ரீ சண்டேசுர நாயனாரைப் போற்றும் பன்னிரு திருமுறைத் தொகுப்பு நூல் ஒன்று சைவப் பெரியார் பண்டிதர் திரு. மு. கந்தையாவினால் வெளியிட்டு வைக்கப்படும்.

மாலை 6 மணியளவில் யாழ் சிப்பி தரை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில் பெரிய புராண படனவிரிவுரையும் ஸ்ரீ சண்டேசுர நாயனாரைப் போற்றும் பன்னிரு திருமுறை நூல் அறிமுக விழாவும் இடம் பெறும். (ஒ-4)

## நடிகர்கள் பயிற்சி நிறுவனம்

நடிகர்கள், இயக்குநர்கள் பயிற்சி பெறுவதற்கான பிலிம் இன்ஸ்ரிரியூட் ஒன்றை தாம் தொடங்கவிருப்பதாக தமிழ்நாட்டின் பிரபல நடிகரும் இயக்குநருமான பாக்கியராஜ் தெரிவித்திருக்கிறார். (உ)

## எம். பிக்களுக்கு தொழிற் சங்கம்

கொழும்பு, ஜன. 21

அரச தரப்பு எம். பிக்கள், தமக்கு என தொழிற் சங்கம் போன்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஸ்ரீலங்காவின் நாடாளுமன்றச் சரித்திரத்தில் எம். பிக்கள் தங்களுக்கு என தொழிற் சங்கத்தை ஒத்த அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருப்பது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# பாஸ்கரலிங்கத்தின் சாதனை:
# 3 ஆண்டுகளில் 89 தடவை லண்டன் சென்னைவிஜயம்

கொழும்பு, ஜன. 21

1990 இற்கும், 1993 இற்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டு காலத்தில் லண்டனுக்கும், சென்னைக்குமாக 89 விமானப் பயணங்களை முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் மேற்கொண்டிருக்கிறார்.

தகவல், ஒலிபரப்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் பல அதிகாரங்களைக் கொண்ட அதி முக்கிய அதிகாரியாக விளங்கிய பாஸ்கரலிங்கம் நிதி அமைச்சின் செயலாளர், ஏயர் லங்கா தலைவர் ஆகிய பதவிகள் உட்பட பல்வேறு பதவிகளைத் தன் கைவசம் வைத்திருந்தவர். ஆட்சி மாற்றத்தை அடுத்து, வெளிநாடு சென்றிருந்த அவர் அங்கிருந்தவாறே — தமது சுகவீனத்தைக் காரணம் காட்டி — தமது பதவிகளிலிருந்து விலகுவதாக அரசுக்கு அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், மோசடி, ஒழுங்கீனங்கள் ஆகியவை குறித்து விசாரிப்பதற்காக — புதிய அரசின் ஏற்பாட்டில் — ஜனாதிபதியால் நியமிக்கப்படவிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு —

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பாஸ்கரலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் விசாரிக்கக் கூடும் என அவதானிகள் தெரிவித்தனர். (உ)

# பாலைதீவு கடற்பகுதியில் மீன்வகைகள் ஏராளம்!

யாழ்ப்பாணம், ஜன. 21

குடாநாட்டுக் கடற்பரப்பில் மீன் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பகிறது. குறிப்பாக பாலைதிவுக் கடற்பகுதியில் மீன் இனங்கள் வகைதொகையின்றி பெருகிக்கிடப்பதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

அங்கு கையால் எட்டி மீன் பிடிக்கும் அளவுக்கு மீன் வகைகள் தாராளமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் கடந்த பல வருடங்களாக மீன் பிடிக்காததே இதற்குக் காரணமாகும். (ஒ-17)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாநகரப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடு மற்றும் பன்றிகள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு யாழ் மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

கால் நடைகள் வீதிகளில் திரிவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது என்றும்—

இவ் வேண்டுகோளை மீறுபவர்கள் மீது மாநகர கட்டளை சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (ஒ-17)

# மிக மோசமான நிலையில் வீதிப் போக்குவரத்து!
## இந்த நிலையால் விபத்துகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஜன. 21

கடந்த சில தினங்களாக மீண்டும் குடாநாட்டில் மழை பெய்து வருவதால், வீதிகள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன.

வீதிகள் எங்கும் ஒரே குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

இந்த நிலையால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. வாகனங்கள் பள்ளங்களைத் தவிர்த்து ஓடுவதாலும் விபத்துக்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

வீதிகளின் மோசமான நிலையால் பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் சைக்கிள் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருப்பதாகவும், சைக்கிள்களின் போக் போன்றவை உடைத்து சேதமாகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

தார் பரல்கள் கொழும்பில் இருந்து வந்து சேராததால் வீதித் திருத்த வேலைகள் தடைப்பட்டிருப்பதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-17)

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.21

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி செல்வன் வசந்தனின் (ச துளசிதரன்) மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவைஇரத்தினதுரை தலைமையில் நடைபெறும் அரங்கேற்ற நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலந்து கொள்கிறார். (ஒ-4)

## தமிழக முதல்வருக்கு யானைக்குட்டி!

சென்னை, ஜன. 21

தஞ்சையில் தமிழராய்ச்சி மாநாட்டை சிறப்பாக நடத்தி முடித்தமைக்காக தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு யானைக்குட்டி ஒன்று பரிசளிக்கப்பட்டது.

தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்த யானைக்குட்டியை உலகத் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பு ஜெயலலிதாவுக்கு அன்மையில் வழங்கியது. (உ)

# அமோனியம் சல்பேற் உரத்துக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் 'அமோனியம் சல்பேற்' உரத்திற்கு தற்போது தட்டுப்பாடு நிலவி வருகிறது.

யூரியா உரத்திற்கு விதிக்கப்பட்ட தடையை அடுத்து அமோனியம் சல்பேற் உரத்தையே வடபகுதி விவசாயிகள் இது வரை பயன்படுத்தி வந்தனர்.

கொழும்பிலும் உரக் சம்பனியில் இந்த உரம் கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து 700 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற் உரத்தை கொழும்பில் கொள்வனவு செய்ய கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கொழும்பு துறைமுக பகுதியில் 'குமண' கப்பலில் இந்த உரம் ஏற்றப்பட்டு வருகிறது. ஒரு கிழமைக்குள் இது யாழ்ப்பாணம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-4)

## வெங்காய செய்கை பாதிப்பு

சண்டிலிப்பாய்,ஜன 21

தற்போது பெய்து வரும் மழை காரணமாக யாழ். மாவட்டத்தில் சின்ன வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், சங்குவேலி, வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய இடங்களில் பல வெங்காய காணிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. (ஒ-135)

## பளையில் வெதுப்பகம்

தென்மராட்சி ஜன 21

பளை ப. நோ. கூ. சங்கத்தினர் இரண்டு லட்சம் ரூபா செலவில் நவீன பேக்கரி (வெதுப்பகம்) ஒன்றை பளை நகரப் பகுதியில் அமைக்கவுள்ளதாக சங்கத் தலைவர் திரு. செ. மார்க்கண்டு தெரிவித்தார். (ஒ-117)

## வெங்காயம் விலை குறைப்பு

பெரிய வெங்காயத்தின் விலையை 39 ரூபாவிலிருந்து 33 ரூபாவாக கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் குறைத்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE CEYLON

# யாழ்ப்பாண கல்லூரி

## பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தொடர்பாடற் கற்கைநெறி
## COMMUNICATION STUDIES

★ G. A. Q. பரீட்சைக்குத் தோற்றுவோர்
★ திறந்த பல்கலைக்கழகத்தில் இத்துறையில் பயில விரும்புவோர்
★ இதழியல் [Journalism], தொடர்பாடற்துறைகளில் தொழில்புரிவோர்
★ ஆர்வமுள்ள அனைவரும் இக்கற்கைநெறியில் இணைந்து "தொடர்பாடற்துறையின்" அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

G. A. Q. பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு விரிவுரைகள் துறைசார் அனுபவம் பெற்றவர்களால் நடத்தப்படும்.

விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில்

விண்ணப்ப முடிவு திகதி: 29-1-1995

[சி-309]



# O/L DEC. 95
## DAY CLASS

★ முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்
★ வாரத்தில் 6 நாட்கள் (8-00 — 1-00 வரை)
★ யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழுவினால்
★ 22 வருடங்களுக்கு மேலாக O/L வகுப்புக்கு தனித்துவம் பெற்று விளங்கும் நிறுவனத்தில்
★ ஒழுங்கு, கட்டுப்பாடு, மாணவர்க்கான அடிப்படை வசதிகள் நிறைந்த நிறுவனத்தில்

**தை 30ல் ஆரம்பம்**

★ முன்னோடிப் பரீட்சையில் தகுதி பெறாத மாணவர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
★ நிறுவன பழைய மாணவர்கள் 1994 Dec. O/L பெறுபேறு வெளி வரும் வரை இலவசமாக கற்க அனுமதிக்கப்படுவர்.

முன் கூட்டியே பெயர்களைப் பதிந்து உங்கள் இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

— அதிபர்.

ESTD:-1973 REGD: № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

[34764]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## ஞானசம்பந்தன் புஸ்பராணி
## (குஞ்சு)

அளவெட்டி கோயில் தோட்டம் திருமதி ஞானசம்பந்தன் புஸ்பராணி (குஞ்சு) லண்டனில் காலமானார்.

இவர் இலங்கை மின்சாரசபை முன்னாள் பொறியியலாளர் த. ஞானசம்பந்தனின் மனைவியாரும், காலஞ் சென்ற ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் தி. கந்தசாமியின் மூத்த மகளும் காலஞ் சென்ற ஓய்வு பெற்ற ஓவசியர் வ. தம்பிராசாவின் மூத்த மருமகளும் ஆவார்.

தகவல்:
த. மனோகரன்
61, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/ 403]

## ஜேம்ஸ் நேசராஜா பிரான்சிஸ்
## (ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்)

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேம்ஸ் நேசராஜா பிரான்சிஸ் அவர்கள் நேற்று (20-1-95) காலமானார்.

இவர் மேரி மக்டலினின் (ராணி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி வினிபிறட் பிரகாசம், திருமதி பிலோமினா பீற்றர், அருட்சகோதரி பிறசிட், அருட் சகோதரி றோசாலி, யேசுதாஸன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்னராசா, றெஜி, றாஜினி, ஜீவா, குயினி ஆகியோரின் பெரிய தகப்பனாரும், ரஜீவ், மிசாளினி ஆகியோரின் அப்புப் பேரனும், அருட்சகோதரி அன்டனி யோசப்பின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (21-01-95) காலை 7.30க்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
திருமதி ராணி பிரான்சிஸ்
(மனைவி)
இல. 100, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்

(34798)

வடக்கிலிருந்து மேலும் 2,600 யாத்திரிகர்கள்:

# கண்காணிப்பு பிரிவு உறுப்பினரும் ராணுவ காவலரண் வரை சென்றனர்

கொழும்பு, ஜன. 21

வடக்கிலிருந்து மேலும் 2,600 யாத்திரிகர்கள் நேற்று முன்தினம் வவுனியா ஊடாக கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவைச் சேர்ந்த கோபி, பொபி உட்பட நான்கு உறுப்பினர்கள் நொச்சிமோட்டை வரை சென்றனர் என்றும்—

நொச்சிமோட்டையில் ராணுவத்துடன் கைலாகு கொடுத்து இவர்கள் உரையாடினர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த யாத்திரிகர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மடு, முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகளின் வாகனங்களில் நொச்சிமோட்டை இராணுவ காவலரணுக்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு காத்திருந்த பஸ்களில் இவர்கள் இராணுவத்தினரால் தாண்டிக்குளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-3)

## தொழில் நுட்பப்பாட ஆசிரியர் தெரிவுப்பரீட்சை

தொழில் நுட்ப பாடசாலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் —

எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்துடன் மறுநாள் 25 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது (ஐ)

## நாளை

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் அமரர் மாப்பாணர் இளையதம்பி ஞாபகார்த்த வைபவம் உரும்பிராயில் இயங்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும், (ஐ)

# எழுதுவினைஞர்களுக்கு இடமாற்ற உத்தரவு!

கொழும்பு, ஜன. 21

யாழ். மாவட்டத்தில் நான்கு வருடங்களுக்கு மேல் பணியாற்றிய எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவையில் உள்ள அரச ஊழியர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணசபை இடமாற்ற உத்தரவுகளை வழங்கியுள்ளது.

திருகோணமலையில் உள்ள மாகாணசபைக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

வெளிமாவட்டங்களில் நான்கு வருடங்களுக்கு மேல் பணியாற்றிய அரச ஊழியர்கள் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் — வடக்கு கிழக்கு மாகாணசபை அறிவித்துள்ளது. (ஐ-3)

## தனியார் விமானச் சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 21

பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக தனியார்துறை விமானப் போக்குவரத்து சேவைகள் கொழும்பில் நிறுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து கனரக வாகனங்கள் கொழும்புக்கு வருவது மட்டுப்படுத்துப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன. (ஐ-6)

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, ஜன. 21

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தின் பரிசில் நாள் இன்று சனி பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு எஸ். கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## சிறுவர் பூங்கா 2 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 21

பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த வியாழனன்று நடைபெறவிருந்த மேற்படி விழா மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது. (ஐ)

## விளையாட்டு நிகழ்வு

விக்ரம்,ராஜன் வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் வளர்மதி முன்னேறறக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் கொக்குவில் இந்துக்கல்லூரிமைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ முற்பகல் 8.30 மணி — ஜொலிஸ்ரார் அணி எதிர் கே. சி. சி. சி. அணி.

★ பிற்பகல் 1 30 மணி — சென்றலைட்ஸ் எதிர் உதயன் வி க அணி. (ஐ 20)

## அரச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பின் கீழ் இருந்த மாவட்ட நிர்வாகத்தை ஐ. தே. க. அரசு பிரதேச செயலகங்களுக்கு பன்முகப் படுத்தியிருந்தது.

பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வந்ததும் மீண்டும் அரச அதிபர்களுக்கு முன்னைய அதிகாரங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

தற்போது அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் அரச அதிபர்களுக்கு பின்வரும் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ பிரதேச செயலகங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு அரச அதிபர் இணைப்பாளராக இருப்பார்.

★ சகல நிதிக் கொடுப்பனவுகளும் அரச அதிபரின் உதவியுடனேயே பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படும்.

★ நிர்வாக மேற்பார்வையை அரச அதிபரே செய்வார்.

★ திட்டமிடல், சம்பள உயர்வுக்கான சிபார்சு, விடுமுறை வழங்கல், விடுமுறை நாட்களில் வேலை செய்ய அனுமதித்தல் போன்ற விடயங்களை அரச அதிபரே மேற்கொள்வார்.

★ பிரதேசசெயலக கணக்கு விவரங்களை அரச அதிபர் செயலக உள்ளக கணக்காய்வு மூலம் ஆய்வு செய்தல். [ஐ-3]

## விமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தில் வாகனஅணியாக ஜனாதிபதி செலயகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

செல்லும் வழி எங்கும் மஞ்சல்,வெள்ளைக்கொடிகள்பறக்கவிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லுமுன் பாப்பரசர் கொச்சிக்கடை சென் அன்ரனீஸ் தேவாலயத்துக்கு சென்று ஆராதனை நடத்தினார்.

பாப்பரசர் நேற்றிரவு வத்திக்கான் பிரதிநிதி அலுவலகத்தில் தங்கினார்.

இன்று காலை காலிமுகத் திடலில் பாப்பரசர் புனித ஆராதனை நடத்துவதுடன் முக்திபேறு வழங்கும் வைபவத்தையும் நடத்துவார். (இ-3)

## வடக்குக்கான...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயங்கும் கண்காணிப்பு குழு அங்கம் பெறும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இன்னும் அங்கு செல்லவில்லை என்றும் தெரியவந்தது. [இ-3]

## இனப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது, உண்மையைப் பேணுவதில் புரிந்துணர்வு காண்பது போன்ற பொதுவான பெறுமானங்களை ஊக்குவிக்கின்றன. —என்றார்.

ஜனாதிபதி சந்திரிகா பாப்பரசரை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :-

பழமைவாய்ந்த நாகரிகத்தின் வாரிசுகளான இலங்கையர்கள் சகிப்புத் தன்மையால் ஊட்டி வளர்க்கப்பட்டவர்கள்.

நாட்டில் உள்ள பல்வேறு மதத்தவர் மத்தியில் தோழமை உணர்வுகளை பலப்படுத்துவதற்கு பாப்பரசரின் விஜயம் உதவும்.

பாப்பரசர் சர்வதேச சமூகங்களுக்கு சமாதான தூதுவராக விளங்குகிறார். இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு அவர் சர்வதேச சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை உருவாக்கி வருகிறார்.

**வடக்கு - கிழக்கு மக்களின் ஆணை**

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்நாட்டு மக்கள் என்றுமே வழங்காத ஆணையை (MANDATE) எமது அரசுக்கு வழங்கியுள்ளனர்.

நாட்டில் இனப் பிரச்சினை இதுவரை பெரும்வன்செயல்களையும், தாக்கங்களையும், சகிப்பின்மையையும் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னர் எமது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுக்களுக்கு வழிகோலின. தற்போது போர் இடைநிறுத்தம் வரை அது வளர்ச்சி கண்டுள்ளது — என்று தெரிவித்தார். (அ-ஐ 3-6)

## பௌத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியில் உரையாற்றிய பாப்பரசர் சர்ச்சைக்குரிய தனது நூல் தொடர்பான விடயம் எதனையும் நேரடியாகக் குறிப்பிடவில்லை.

அதற்குப் பதிலாக —

பௌத்த மதத்தின் அடிப்படைக் கொள்கை காருண்யம், பரிவு பற்றற்ற, தன்மை போன்றவற்றை மதித்து மிக உயர்வாக தனது உரையில் பாப்பரசர் கருத்துக்களைத் தெரிவித்தார்.

பௌத்த மதம் குறித்து முன்பு கூறிய கருத்துக்களுக்காக இலங்கை விஜயத்தின் போது பாப்பரசர் மன்னிப்பு கோர மாட்டார் என்று வத்திக்கானில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

பௌத்த மதம் நாஸ்திகத்துக்கு ஒப்பானது என்றும் மக்களை உலகநடைமுறைக்குஒவ்வாத மாறுபட்ட நிலைக்கு இட்டுச் செல்வதே பௌத்த மதத்தின் நோக்கம் என்றும் பாப்பரசர் தனது நூல் ஒன்றில் வெளியிட்ட கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததும். —

தான் வெளியிட்ட கருத்துக்களுக்காக பாப்பரசர் பௌத்த மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பௌத்த மதத் தலைவர்கள் வலியுறுத்தி வந்ததும் தெரிந்தவையே. [ஐ-3]

## இலங்கை அஞ்சால்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எம்பியான ஜனரப் ஏ. எச். எம். அஸ்வர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ குழுவில் அன்றித் தனிப்பட்டமுறையில் அவர்கள் சென்றதால் தாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாதுள்ளது என்றும் —

எதிர்காலத்தில் இத்தகைய மாநாடுகளில் தமிழ் அறிஞர்கள் உத்தியோக பூர்வமாக பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-3)

# "தூரம் தொடுவானம்" நாவல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 21

"தூரம் தொடுவானம்" என்ற நாவலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. பொன். கணேசமூர்த்தி இந்த நாவலை எழுதியுள்ளார்.

வெளியீட்டு விழாவுக்கு திரு. ஆ. தேவர் அண்ணா தலைமை வகிப்பார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் நூலை வெளியிட்டு வைக்க —

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்குவர். (ஐ)

## ரஷ்யக் கொடி

குறொஸ்னி, ஜன. 21

செசின்யாவின் தலைநகர் குறொஸ்னியில் பலத்த சண்டையின் பின்னர் அரச அதிபர் மாளிகையை ரஷ்யப்படைகள் கைப்பற்றி உள்ளன.

ரஷ்ய ஹெலிக்கொப்டர்கள் நேற்று நகரில் தாழப்பறந்து சென்றன. செசின்யர்களை ஆயுதங்களைக் கைவிடும்படி ஹெலியிலிருந்து ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் செசின்யாவில் ரஷ்யப் படைகளுக்கும் செசின்யப் பிரிவினைவாதப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு ஒன்றைக்கொண்டு வருவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முயற்சித்து வருகிறது. (இ)

## ஜப்பானில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

4 ஆயிரத்து 500 ஐ அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

காணாமற்போனவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]


உ
சிவமயம்

# சிவாச்சார்யாபிஷேக முகூர்த்த விழா

நிகழும் மங்களகரமான பவவருடம் தை மாதம் 8/9 ஆம் திகதி (22-01-1995) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் ஷஷ்டிதிதியும், அமிர்த சித்த யோகமும் கூடிய சுப நன்னாளில் முற்பகல் 9மணி50நிமிடம் முதல் 10 மணி 35 நிமிடம் வரையிலான சுக்ர (சந்த்ர) ஓரையுடன் கூடிய மீன லக்ன சுப நன் மங்கள முகூர்த்தத்தில் — கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலய ஆதீன கர்த்தா பிரமஸ்ரீ இ. சோமேஸ்வரசர்மா தம்பதிகளின் புத்திரன்



பிரம்மஸ்ரீ
## சோ. வாகீஸ்வர சர்மாவுக்கு

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் சிவாச்சார்யாபிஷேகம் நிகழவுள்ளதால், அத்தருணம் மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு:
பிரம்மஸ்ரீ சு. சர்வேஸ்வரக்குருக்கள்
(மயிலணி)

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ இ. சோமேஸ்வரசர்மா,
ஸ்ரீமதி சோ. விமலாதேவி.
கந்தரோடை.

வரவேற்பாளர்கள்:
பிரம்மஸ்ரீ. ப. ஜெயக்குமாரக் குருக்கள் தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ. பூ. கீதச்சந்திரக் குருக்கள் தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ ப. சிவசங்கரக் குருக்கள் தம்பதிகள்.

(சி-401)



## சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா
# 2ஆம் ஆண்டு நிறைவுவிழா

பொம்மைவெளி, யாழ்ப்பாணம்

**22-01-1995 மாலை 3 மணி**

18-01-95 நடைபெறவிருந்த சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா இரண்டாம் ஆண்டு நிறைவு விழா, மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது தாங்கள் அறிந்ததே. மீண்டும் இவ்விழா 22-01-95 ஞாயிறு மாலை 3 மணிக்கு நடைபெறும். இதனை ஏற்று விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

சிறுவர் பாதுகாப்புத் திட்டம்,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ். மாவட்டம்.

விளம்பர அன்பளிப்பு:
**வணிகர் கழகம்**
யாழ்ப்பாணம்

[சி-404]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 3,11/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது